DINAMALAR

PAGE NO: 01

DATE: 04.12.2023

## புதுச்சேரி பல்கலை.,க்கு இன்று விடுமுறை

புதுச்சேரி, டிச. 4–

புதுச்சேரி பல்கலைக்கழகத்திற்கு இன்று 4ம் தேதி விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. புதுச்சேரியில் 'மிக்ஜாம்' புயல் காரணமாக பள்ளி, கல்லுாரிகளுக்கு, புதுச்சேரி தொழில்நுட்ப பல்கலைக்கழகத்திற்கு இன்று 4ம் தேதி விடுமுறை அறிவிக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து, புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகத்திற்கு இன்று 4ம் தேதி விடுமுறை அளிக்கப்படுவதாகவும், விடுமுறை ஈடு செய்யும் நாள் குறித்து பின்னர் அறிவிக்கப்படும் என, புதுச்சேரி பல்கலைக்கழக பதிவாளர் ரஜ்னிஷ்பூடானி தெரிவித்துள்ளார்.

DINAKARAN

PAGE NO: 14

DATE: 04.12.2023

## புதுவை பல்கலைக்கு இன்று விடுமுறை

புதுச்சேரி, டிச. 4: மிக்ஜாம் புயல் எச்சரிக்கை காரணமாக புதுச்சேரி பல்கலைக்கழகத்திற்கு இன்று (4ம் தேதி) விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து புதுச்சேரி பல்கலைக்கழக பதிவாளர் ரஜ்னீஷ் பூடானி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: மிக்ஜாம் புயல் காரணமாக இந்திய வானிலை ஆய்வு மையம் விடுத்துள்ள எச்சரிக்கையை அடுத்து, புதுச்சேரி பல்கலைக்கழகம் இன்று (4ம் தேதி) மூடப்படும். பின்னர், இந்த விடுமுறை சனிக்கிழமையன்று வேலை செய்வதன் மூலம் ஈடு செய்யப்படும் என்று தெரிவிக்கப்படும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

DAILY THANTHI

PAGE NO: 13 DATE: 04.12.2023

# புதுவை பல்கலைக்கழகத்திற்கு இன்று விடுமுறை

புதுச்சேரி, டிச.4-

புதுவை பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

மிக்ஜம் புயலை தொடர்ந்து புதுவை பல்கலைக்கழகத்திற்கு இன்று (திங்கட்கிழமை) விடுமுறை விடப்பட்டுள்ளது. இந்த விடுமுறையை ஈடு செய்யும் வகையில் சனிக்கிழமை பல்கலைக்கழகம் செயல்படும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.